சிதம்பரம் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல் முறைகள்

முன்னிலை : திருமதி D. மல்லிகா, B.Sc.,

ந.க.எண் : 770/2024/எப்1 நாள் : 15.07.2024

பொருள் : -	மனைப்பிரிவு – சிதம்பரம் நகராட்சி – சிதம்பரம் நகரம் சர்வே வார்டு எண்.1, பகுதி–2, வார்டு எண்.4 பகுதி எண்.5 நகரளவு எண்.491/1, 493/4 (பழைய நகரளவு எண்.493 பரப்பளவு 5006.50 ச.மீட்டர் (53889.51 சதுர அடி 1.23 ஏக்கர்) அளவிற்கு வேணுகோபால் பிள்ளை தெருவில் உள்ள இடத்தில் குடியிருப்பு 16 மனைகளாக பிரிக்கப்பட்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அனுமதியளித்து உத்தரவிடுதல் தொடர்பாக.
பார்வை : -	1) உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் அவர்களின் ம.வ./ந.ஊ.உ.இ..க.மா) எண்.38/2024 என எண்ணிடப்பட்ட கடிதம் ந.க.எண். NCGS3TDB/2024/2024/TCP நாள் 03.04.2024–ன்படி தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்ட உத்தரவு. 2) மனுதாரர் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கிட நகர்மன்ற தீர்மானம் எண். 59, நாள் 24.06.2024. 3) மனுதாரர் மனைப்பிரிவு அனுமதி கோரிய 05.04.2024 மற்றும் 05.07.2024 நகர் ஊரமைப்பு துறைக்கு கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தது. 4) இவ்வலுவலக 16.04.2024 தேதிய அறிவிப்பினை தொடர்ந்து மனுதாரர் கடிதம் நாள் 15.07.2024.

உத்தரவு

சிதம்பரம் நகரம் சர்வே வார்டு எண்.1, பகுதி–2, வார்டு எண்.4 பகுதி எண்.5 நகரளவு எண்.491/1, 493/4 (பழைய நகரளவு எண்.493 பரப்பளவு 5006.50 ச.மீட்டர் (53889.51 சதுர அடி 1.23 ஏக்கர்) அளவிற்கு வேணுகோபால் பிள்ளை தெருவில் உள்ள இடத்தில் குடியிருப்பு 16 மனைகளாக பிரிக்கப்பட்டு, பார்வை 1ல் கண்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் கடிதம் ந.க.எண். NCGS3TDB/2024/2024/TCP நாள் 03.04.2024—ந்தேதிய கடிதத்தில் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ந.ஊ.உ.இ..க.மா எண்.38/2024–ல் நாள் 03.04.2024–ந் தேதி என எண்ணிடப்பட்ட மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் உள்ள சாலைகள் பூங்கா மற்றும் திறவிடங்களை நகராட்சி தான பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்துள்ளதனை பதிவு செய்து மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க நகர்மன்ற தீர்மானம் எண்.59, நாள் 24.06.2024–ல் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மனுதாரர் பொது இடங்களை நகராட்சி ஆணையர் பெயரில் வருவாய் துறை மூலம் உட்பிரிவு செய்து பட்டா மாற்றம் செய்ய இணையதளத்தில் பதிவு எண். 2024/0154/18/0D4906–ல் பதிவு செய்துள்ளார். மேலும் மனைப்பிரிவில் அமையும் குடியிருப்பு மனைகளுக்கு காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட்டு வரி செலுத்தியுள்ளார். தீர்மானம் எண்.59– நாள் 24.06.2024ன்படியும், 16 மனைகளுக்கு விற்பனை பத்திரம் பதிவு செய்ய இதன்மூலம் தடையின்மை சான்று வழங்கி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1) மனைகள் விற்பனை செய்யும்போது வரைபடம் ம.வ./ந.ஊ.உ.இ..க.மா எண்.38/2024 நாள் 03.04.2024ன்படி மனைப்பிரிவு நிபந்தனைகளையும் மனைப்பிரிவு வரைபடத்தினையும் இணைத்துதான் விற்பனை செய்யவேண்டும். நிபந்தனைகள் நடைமுறையில் கடைபிடிக்க வேண்டும்.
2) மனைப்பிரிவில் உள்ள இடங்களில் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள இடங்களில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
3) நகர் ஊரமைப்புத்துறையால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட ஆணையின் நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் முழுவதுமாக பின்பற்றிட வேண்டும்.

15/7/24

ஆணையாளர்,
சிதம்பரம் நகராட்சி.

பெறுநர்

திரு. பா. வெங்கடேசன், திரு பா. ராமச்சந்திரன்,
337, பார்க் ரோடு, மாரியப்பா நகர், அண்ணாமலை நகர், சிதம்பரம்.

15-7-24

(த.பி.பா.)

நகல் :

1) மாவட்ட பதிவாளர், சிதம்பரம்.
2) உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, கடலூர்.
3) நகராட்சி பொறியாளர்/சுகாதார அலுவலர்/வருவாய் ஆய்வாளர், சிதம்பரம் நகராட்சி – பராமரிப்பு பணிகளுக்காக.
4) காசாளர், சிதம்பரம் நகராட்சி – அசல் பத்திர பதிவு ஆவணம் காப்பகத்தில் வைக்க.

நகல் பணிந்தனுப்படுகிறது.

நகர்மன்ற தலைவர், சிதம்பரம் அவர்களின் தகவலுக்கு.